பிரசார் பாரதி

அகில இந்திய வானொலி, சென்னை - 4

**06 07 2026** **6 45**

திங்கட்கிழமை காலை

<u>தலைப்புச் செய்திகள்</u>

1. பிரதமர் திரு. நரேந்திர மோடி இன்று முதல் ஆறு நாட்கள் இந்தோனேசியா, ஆஸ்திரேலியா மற்றும் நியூசிலாந்து ஆகிய நாடுகளில் அரசு முறைப்பயணம் மேற்கொள்கிறார்.

2. நாடு முழுவதும், 50 ஆயிரம் தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு கடன் சங்கங்களை மின்னணு சங்கங்களாக மாற்றும் திட்டத்தை மத்திய கூட்டுறவுத்துறை அமைச்சர் திரு. அமித் ஷா இன்று புதுதில்லியில் தொடங்கி வைக்கிறார்.

3. எல்-நினோ தாக்கத்தை எதிர்கொள்வதற்கு தேவையான முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை த.வெ.க. அரசு மேற்கொள்ள வேண்டும் என்று பிஜேபி வலியுறுத்தியுள்ளது.

4. தமிழகத்தில் மேற்குத்தொடர்ச்சி மலை மாவட்டங்களின் ஓரிரு இடங்களில் இன்று பலத்த காற்றுடன் மிதமான மழை பெய்யக்கூடும் என்று வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

5. சர்வதேச மகளிர் டென்னிஸ் போட்டியின் இரட்டையர் பிரிவு இறுதியாட்டத்தில் இந்தியாவின் அங்கிதா ரெய்னா - ஜப்பானின்

**Hiroko Kuwata** இணை, அமெரிக்க இணையுடன் தற்போது விளையாடி வருகிறது.

--- இனி விரிவான செய்திகள் ---

<<<<>>>>

பிரதமர் திரு. நரேந்திர மோடி இன்று முதல் ஆறு நாட்கள் இந்தோனேசியா, ஆஸ்திரேலியா மற்றும் நியூசிலாந்து ஆகிய நாடுகளில் அரசு முறைப்பயணம் மேற்கொள்கிறார்.

இந்தப் பயணத்தின் முதல் கட்டமாக, இன்று இந்தோனேசியா செல்லும் பிரதமர், அங்கு மூன்று நாட்கள் தங்கியிருப்பார்.

இந்தோனேசியிவிற்கு பிரதமர் செல்வது இது நான்காவது முறையாகும்.

2018-ம் ஆண்டு மே மாதம் இந்தியா - இந்தோனேசியா நாடுகளுக்கு இடையே நடைபெற்ற விரிவான பேச்சுக்களுக்கு பிறகு இரு நாட்டு தலைவர்களும் தற்போது சந்தித்துப் பேச உள்ளனர்.

இந்தப் பயணத்தின்போது, இந்தோனேசிய அதிபர் திரு. பிரபோவோ சுபியான்டோவுடன் பிரதமர் பேச்சு நடத்துவார்.

ஜகார்த்தாவில் நடைபெறும் நிகழ்ச்சியில் இந்திய வம்சாவளியினரிடையே உரையாற்றும் பிரதமர், யோக்யகர்த்தா நகரில் உள்ள பிரம்பானன் கோயில் வளாகத்தைப் பார்வையிட உள்ளார்.

அங்குள்ள பாதுகாப்புப் பணிகளில் இந்தியாவும் இந்தோனேசியாவும் இணைந்து செயல்பட உள்ளன.

மலாக்கா நீரிணைப் பகுதியின் பாதுகாப்பு மற்றும் ஸ்திரத்தன்மையில் இந்தோனேசியா வகிக்கும் பங்கு, இந்தியாவின் கடல்சார் வணிகப் பாதைக்கு மிகவும் முக்கியமானதாக கருதப்படுகிறது.

பயணத்தின் இரண்டாம் கட்டமாக, வரும் 8-ம் தேதி ஆஸ்திரேலியாவின் மெல்போர்ன் நகருக்குச் செல்லும் பிரதமர், அங்கு மூன்று நாட்கள் தங்கியிருப்பார்.

அந்நாட்டின் பிரதமர் திரு. அந்தோணி அல்பனீசுடன் இணைந்து மூன்றாவது இந்தியா-ஆஸ்திரேலியா வருடாந்திர உச்சிமாநாட்டில் பங்கேற்க உள்ளார்.

தனது பயணத்தின் இறுதி மற்றும் மூன்றாம் கட்டமாக, ஜூலை 10 மற்றும் 11 ஆகிய தேதிகளில் நியூசிலாந்தில் பிரதமர் திரு. மோடி தங்கியிருப்பார்.

அங்கு நியூசிலாந்து பிரதமர் திரு. கிறிஸ்டோபர் லக்சனுடன் பேச்சு நடத்த உள்ளார்.

**40** ஆண்டுகளுக்குப் பிறகு இந்தியப் பிரதமர் ஒருவர் நியூசிலாந்தில் மேற்கொள்கின்ற முதல் பயணம் இதுவாகும்.

பயணத்தின்போது, முக்கிய வர்த்தக மற்றும் விளையாட்டுப் பிரமுகர்களை சந்திப்பதோடு, இந்திய வம்சாவளியினரிடையேயும் பிரதமர் உரையாற்றுவார்.

<<<<>>>>

நாடு முழுவதும், **50** ஆயிரம் தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு கடன் சங்கங்களை மின்னணு சங்கங்களாக மாற்றும் திட்டத்தை மத்திய கூட்டுறவுத்துறை அமைச்சர் திரு. அமித் ஷா இன்று புதுதில்லியில் தொடங்கி வைக்கிறார்.

மத்தியில் கூட்டுறவு அமைச்சகம் தொடங்கப்பட்டு ஐந்தாம் ஆண்டு நிறைவடைவதையொட்டி நடைபெறும் விழாவில் கூட்டுறவு மூலம் வளம் என்ற தொலைநோக்குப் பார்வையுடன் **232** தானியக் கிடங்குகளுக்கு அவர் அடிக்கல் நாட்டவுள்ளார்.

பல முடிவுற்ற திட்டங்களையும் அமைச்சர் தொடங்கி வைக்க உள்ளார்.

தேசிய கூட்டுறவுத் தரவுத்தளம் மற்றும் புவிசார் குறியீடு செயலி, தேசிய பால்வள மேம்பாட்டு வாரியத்தின் பால் விநியோகக் கண்காணிப்பு இணையதளம் ஆகியவற்றையும் திரு. அமித்ஷா தொடங்கி வைக்க உள்ளார்.

இந்நிகழ்ச்சியில், இந்திய விதைக் கூட்டுறவுச் சங்கத்திற்கும், இந்திய வேளாண் ஆராய்ச்சிக் கழகத்திற்கும் இடையே, விதை அமைப்புகளை வலுப்படுத்துவதற்கான புரிந்துணர்வு ஒப்பந்தம் கையெழுத்திடப்படும் என்று மத்திய அரசின் செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த விழாவில் மத்திய மீன்வளம், கால்நடை பராமரிப்புத்துறை அமைச்சர் திரு. ராஜீவ் ரஞ்சன் சிங், ராஜஸ்தான் முதலமைச்சர் திரு. பஜன் லால் சர்மா, மற்றும் கூட்டுறவுத்துறை இணையமைச்சர்கள் திரு. கிரிஷன் பால் குர்ஜார், திரு. முரளிதர் மோஹோல் ஆகியோர் கலந்துகொள்கின்றனர்.

<<<<>>>>

விவசாய விளைபொருட்களுக்கு உழவர் உற்பத்தியாளர் கூட்டமைப்பு சந்தை வாய்ப்புகளை ஏற்படுத்தி தருகிறது.

மதிப்பு கூட்டப்பட்ட பொருட்களை விவசாயிகள் உற்பத்தி செய்ய நபார்டு வங்கி கடனுதவி அளித்து வருவதாக அந்த வங்கியின் சென்னை மண்டல பொதுமேலாளர் திரு. கிருஷ்ணராஜ் கூறினார்.

சேலத்தில் நேற்று நடைபெற்ற நிகழ்ச்சியில் அவர் பேசினார்.

**(Voice Byte — Krishnaraj — 24 Sec)**

மதிப்புக் கூட்டப்பட்ட பொருட்களால் தங்களுக்கான வருவாய் அதிகரித்துள்ளதாக விவசாயிகள் தெரிவித்தனர்.

**(Voice Byte — Farmers — 38 Sec)**

<<<<>>>>

எல்-நினோ தாக்கத்தை எதிர்கொள்வதற்கு தேவையான முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை த.வெ.க. அரசு மேற்கொள்ள வேண்டும் என்று பிஜேபி வலியுறுத்தியுள்ளது.

இதுதொடர்பாக அக்கட்சி வெளியிட்டுள்ள அறிக்கையில், மத்திய அரசு இதற்கான முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை தீவிரமாக மேற்கொண்டு வருவதாக தெரிவித்துள்ளது.

இதன் அடிப்படையில் த.வெ.க அரசும் பேரிடர் மேலாண்மை பணிகளை உடனடியாக தொடங்க வேண்டும் என்றும் பிஜேபி அந்த அறிக்கையில் கேட்டுக்கொண்டுள்ளது.

<<<<>>>>

கரூர் கூட்ட நெரிசலில் 41 பேர் உயிரிழந்த சம்பவம் குறித்து மத்திய புலனாய்வுத்துறை விசாரித்து வரும் நிலையில் மாநில அமைச்சர்கள் அது தொடர்பாக கருத்து தெரிவிப்பது ஏற்புடையதல்ல என்று மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கூறியுள்ளது.

இதுதொடர்பாக அக்கட்சியின் மாநில செயலாளர் திரு. சண்முகம் நேற்று மதுரையில் செய்தியாளர்களிடம் பேசுகையில், கரூர் சம்பவம் தொடர்பாக தங்களது கட்சியின் நிலைப்பாட்டில் மாற்றமில்லை என்று கூறினார்.

தமிழகத்தில் இடதுசாரி கட்சிகள் எந்த அணியிலும் இடம்பெறவில்லை என்றும், தனித்து செயல்படுவதாகவும் அவர் தெரிவித்தார்.

<<<<>>>>

தமிழகத்தில் மேற்குத்தொடர்ச்சி மலை மாவட்டங்களின் ஓரிரு இடங்களில் இன்று பலத்த காற்றுடன் மிதமான மழை பெய்யக்கூடும் என்று வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

மாநிலத்தின் பிற பகுதிகளிலும், புதுச்சேரி மற்றும் காரைக்கால் பகுதிகளிலும் பலத்த காற்றுடன் கூடிய லேசானது முதல் மிதமான மழை பெய்யக்கூடும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

சென்னையைப் பொறுத்தவரை வானம் ஓரளவு மேகமூட்டத்துடன் காணப்படும் என்றும், நகரின் ஒருசில பகுதிகளில் லேசான மழை பெய்ய வாய்ப்புள்ளது என்றும் வானிலை ஆய்வு மையம் கூறியுள்ளது.

ஆந்திரப்பிரதேச கடலோரப் பகுதி, வடக்கு மற்றும் மத்திய வங்கக் கடலின் பெரும்பாலான பகுதிகள், அதனையொட்டியுள்ள தெற்கு வங்கக் கடலின் சில பகுதிகளில் சூறாவளிக் காற்று வீசக்கூடும் என்பதால் மீனவர்கள் மீன்பிடிக்க கடலுக்கு செல்ல வேண்டாம் என்று அறிவுறுத்தப்பட்டுள்ளனர்.

<<<<>>>>

*இருவரிச் செய்திகள்*

யுக்ரைன் மீது ரஷ்யா பெரும் தாக்குதல் நடத்த திட்டமிட்டுள்ளதாகவும், அதைத் தடுக்க நேட்டோ நாடுகள் உதவ வேண்டும் என்று அதிபர் திரு. ஜெலன்ஸ்கி கேட்டுக்கொண்டுள்ளார்.

--------------

அமெரிக்க தலைநகர் வாஷிங்டனில் ஒரு உணவகத்தில் மர்ம நபர் கண்மூடித்தனமாக துப்பாக்கியால் சுட்டதில் உயிரிழந்தோர் எண்ணிக்கை 8ஆக உயர்ந்துள்ளது.

--------------

ஹரியானா மாநிலம் Rewari-யில் ஓய்வு பெற்ற ராணுவ அதிகாரி வீட்டில் நேற்றிரவு வெடிவிபத்து ஏற்பட்டதில் 5 பேர் படுகாயமடைந்தனர்.

--------------

கனமழை காரணமாக மும்பை, புனே உள்ளிட்ட நகரங்களில் மக்களின் இயல்பு வாழ்க்கை பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளது.

--------------

திருவள்ளூர் மாவட்டத்தில் பிஹார் மாநிலத்தைச் சேர்ந்த புலம்பெயர்ந்த பெண் தொழிலாளி ஒருவர் நேற்று மின்சாரம் தாக்கி உயிரிழந்தார்.

--------------

நெய்வேலி என்.எல்.சி. முதல் சுரங்கத்தில் ஏற்பட்டுள்ள தீயை அணைக்கும் பணியில் தீயணைப்பு படையினர் ஈடுபட்டுள்ளனர்.

--------------

திருநெல்வேலி மாவட்டத்தில் அரசு மற்றும் தனியார் தொழிற்பயிற்சி நிலையங்களில் மாணவர் சேர்க்கை இம்மாதம் **31**ஆம் தேதி வரை நீட்டிக்கப்பட்டுள்ளதாக மாவட்ட நிர்வாகம் அறிவித்துள்ளது.

--------------

முதல்வர் படைப்பகங்கள் தனியார்மயமாக்கப்படவில்லை என்று சென்னை மாநகராட்சி ஆணையர் திரு. சமீரன் தெரிவித்துள்ளார்.

--------------

சென்னையில் கட்டுமானப் பணியின்போது வழிகாட்டு நெறிமுறைகளைப் பின்பற்றாத நிறுவனங்களிடம் இருந்து **12** லட்சத்து **25** ஆயிரம் ரூபாய் அபராதம் வசூலிக்கப்பட்டுள்ளதாக மாநகராட்சி தெரிவித்துள்ளது.

--------------

*விளையாட்டுச் செய்திகள்*

அமெரிக்காவில் நடைபெறும் சர்வதேச மகளிர் டென்னிஸ் போட்டியின் இரட்டையர் பிரிவில் இந்தியாவின் அங்கிதா ரெய்னா - ஜப்பானின் **Hiroko Kuwata** இணை, அமெரிக்காவின் கேத்தரின்

ஹாரிசன் - டலாய்னா ஹீவித் இணையுடன் தற்போது விளையாடி வருகிறது.

--------------

உலகக் கோப்பை கால்பந்து போட்டியில் இருந்து பிரேசில் அணி வெளியேறியுள்ளது.

நியூஜெர்சியில் நள்ளிரவு நடைபெற்ற காலிறுதிக்கு முந்தைய சுற்று ஆட்டத்தில் நார்வே 2-1 என்ற கோல் கணக்கில் பிரேசில் அணியை வென்றது.

இந்நிலையில் பிரேசில் அணியின் முன்னணி வீரர் நெய்மர் சர்வதேச கால்பந்து விளையாட்டில் இருந்து ஓய்வு பெறுவதாக அறிவித்துள்ளார்.

இன்று நடைபெற உள்ள போட்டியில் மெக்சிகோ - இங்கிலாந்தையும், மற்றொரு போட்டியில் போர்ச்சுகல் - ஸ்பெயினையும் எதிர்கொள்கின்றன.

-------------

உலகக் கோப்பை மகளிர் ட்வெண்ட்டி ட்வெண்ட்டி கிரிக்கெட் போட்டியின் இறுதியாட்டத்தில் ஆஸ்திரேலியா 7 விக்கெட் வித்தியாசத்தில் இங்கிலாந்தை வென்றது.

**<<<<The End>>>>**